பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**16 02 2026** **MONDAY** **12 40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. புதுதில்லியில் நடைபெறும் சர்வதேச செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் பல்வேறு நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருப்பது பெருமைக்குரியதாகும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. அரசியலமைப்பின் 370-ஆவது பிரிவு நீக்கியதன் மூலம், ஜம்மு காஷ்மீர் உள்ளிட்ட பகுதிகளில் வன்முறை சம்பவங்கள் 80 சதவீதம் குறைந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.
3. ஜெர்மனி சென்றுள்ள மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், இந்தியா — ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக திட்டத்தில் முதலீடு செய்வதற்கான ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளார்.
4. சீனாவின் **Jiangsu** மாகாணத்தில் பட்டாசு கடையில் நேரிட்ட தீ விபத்தில் எட்டு பேர் உயிரிழந்தனர்.
5. ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் ஈஸ்ட் பெங்கால் அணி இன்று ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.

--இனி விரிவான செய்திகள்---

>>>>>><<<<<<

செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டிற்காக பல்வேறு நாடுகளிலிருந்து ஏராளமானோர் இந்தியா வந்திருப்பது பெருமைக்குரிய விஷயம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அறிவியல் தொழில்நுட்பத்தில் இந்தியா வளர்ச்சி அடைந்ததற்கு இந்த மாநாடு எடுத்துக்காட்டாக இருப்பதாக தெரிவித்தார்.

நாட்டின் இளைஞர்களின் திறனை இந்த மாநாடு பிரதிபலிப்பதாக கூறிய பிரதமர், உலகளாவிய தொழில் நுட்ப வளர்ச்சியில் இந்தியா, முன்னணி நாடாக திகழ்வதாக தெரிவித்தார்.

புதுதில்லியில் இன்று தொடங்கிய இந்திய செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டின் ஒருபகுதியாக இது தொடர்பான கண்காட்சியை இன்று மாலை திரு நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார்.

இந்த உச்சி மாநாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

இந்த மாநாட்டிற்கு, 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இணையதளம் மூலம் பதிவு செய்துள்ளனர்.

>>>>>><<<<<<

பிரதமர் திரு நரேந்திர மோடி மும்பையில் நாளை பிரான்ஸ் அதிபர் திரு இமானுவெல் மெக்ரானுடன், ஆலோசனை மேற்கொள்கிறார்.

இக்கூட்டத்தில், இந்தியா — பிரான்ஸ் நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு குறித்து முக்கிய ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது.

புதுதில்லியில் இன்று தொடங்கிய செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில், திரு நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று, மூன்று நாள் பயணமாக பிரான்ஸ் அதிபர் இந்தியா வந்துள்ளார்.

நாளை மாலை மும்பையில் நடைபெறும் நிகழ்ச்சியில், இந்தியா — பிரான்ஸ் நாடுகளின் தொழில்முனைவோர்கள், ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

>>>>>><<<<<<

புதுதில்லியில் நடைபெறும் செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு மூலம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க முன்னுரிமை அளிக்கப்படும் என்று பிரிட்டன் துணை பிரதமர் திரு டேவிட் லேமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த உச்சிமாநாட்டில் திரு டேவிட் லேமியுடன், செயற்கை நுண்ணறிவு

அமைச்சர் திரு கனிஷ்கா நாராயண் உள்ளிட்டோர் பங்கேற்பதாக கூறியுள்ளது.

சர்வதேச அளவில் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கு செயற்கை நுண்ணறிவு வழிவகை செய்யும் என்று திரு டேவிட் லேமி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

அரசியலமைப்பின் 370-ஆவது பிரிவு நீக்கியதன் மூலம், ஜம்மு காஷ்மீர் உள்ளிட்ட பகுதிகளில் வன்முறை சம்பவங்கள் 80 சதவீதம் குறைந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

தில்லி காவல்துறையின் 79-ஆவது நிறுவன நாளையொட்டி, இன்று உரையாற்றிய அவர், 11 மாநிலங்களில் உள்நாட்டு பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்த நக்சலைட்டுகளை கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளதாக தெரிவித்தார்.

தில்லி காவல்துறையின் 345 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள ஒருங்கிணைந்த மைய கட்டிடத்திற்கு திரு அமித் ஷா அடிக்கல் நாட்டினார்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் தீவிரவாத்தத்தை ஒடுக்கும் வகையில் இந்த மையம் செயல்படும் என்று அவர் கூறினார்

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை கொண்டுவந்ததை திரு அமித் ஷா சுட்டிக்காட்டினார்.

>>>>>><<<<<<

ஜெர்மனி சென்றுள்ள மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், இந்தியா — ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக திட்டத்தில் முதலீடு செய்வதற்கான ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், கடல்சார் ஒத்துழைப்புத் திட்டங்களை விரைவுப்படுத்துவதற்கான நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக கூறினார்.

கடல்வளம் தொடர்பான முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு மத்திய அரசு ஜெர்மனியில் உள்ள முக்கிய நிறுவனங்களுடன் ஆலோசனை மேற்கொண்டு வருவதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ராணுவ தலைவர் ஜெனரல் உபேந்திர துவேதி, நான்கு நாள் அரசு முறைப்பயணமாக ஆஸ்திரேலியா சென்றுள்ளார்.

இந்தியா — ஆஸ்திரேலியாவுக்கு இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்புத் திட்டங்கள் தொடர்பான ஆலோசனையில் அவர் ஈடுபட உள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

ஆஸ்ரேலிய பாதுகாப்புப் படையின் உயரதிகாரிகளுடன் இருதரப்பு ஒத்துழைப்புத் திட்டங்கள் தொடர்பாகவும், ராணுவ வீரர்களுக்கான பயிற்சி, கூட்டு ராணுவப் பயிற்சி, ராணுவத்தினருக்கான திறன் மேம்பாடு உள்ளிட்டவற்றில் பரஸ்பர பரிமாற்றம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்திய — பிசிபிக் பிராந்தியத்தில் அமைதியை காக்கவும், ஸ்திரத்தன்மையை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் கூறுகிறார்.

>>>>>><<<<<<

பங்களாதேஷ் தேசிய கட்சித் தலைவர் திரு. தாரிக் ரஹ்மான் தலைமையிலான அரசு நாளை பதவியேற்கவுள்ளது.

டாக்காவில் நாளை மாலை நடைபெறும் நிகழ்ச்சியில் பங்களாதேஷ் அதிபர் திரு மொகம்மத் சஹாபுதீன் பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.

இந்த பதவியேற்பு நிழ்ச்சியில் இந்தியா சார்பில் மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா பங்கேற்கவுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

திரு ஓம் பிர்லாவின் டாக்கா பயணம் இந்தியா - பங்களாதேஷ் இடையேயான உறவுகளை மேம்படுத்தும் வகையில் அமையும் என்று அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

>>>>>><<<<<<

குஜராத் மாநில சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று காலை தொடங்கியது.

அம்மாநில ஆளுநர் திரு ஆச்சாரிய தேவ்ரத் இன்று உரையாற்றினார்.

வரும் 18-ஆம் தேதி 2026-27ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டை அம்மாநில நிதியமைச்சர் ஹனுபாய் தேசாய் சமர்ப்பிக்க உள்ளார்.

மார்ச் 25-ஆம் தேதிவரை இந்த கூட்டத்தொடர் நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

மேகாலயா சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று காலை தொடங்கியது.

அம்மாநில ஆளுநர் திரு **C H Vijay Shankar** இன்று தொடக்க உரையாற்றினார்.

பட்ஜெட் கூட்டத்தொடர் ஏழு நாட்கள் நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வரும் நிதியாண்டுக்கான மாநில பட்ஜெட்டை நிதியமைச்சர் **Conrad K Sangma** வரும் **20**-ஆம் தேதியன்று சமர்ப்பிக்க உள்ளதாக எமது செய்தியாளர் மேலும் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

உதகையில் நடைபெறும் **128**-ஆவது மலர் கண்காட்சிக்கான ஆயத்தப்பணிகள் தொடங்கியுள்ளன.

இதில் பத்து லட்சம் மலர் நாற்றுகளும், **50** ஆயிரம் மலர் தொட்டிகளும் தயார்படுத்தப்படும் என்று மாவட்ட ஆட்சியர் லஷ்மி பவ்யா தண்ணீரு கூறியுள்ளார்.

***(Sound Byte — ஆட்சியர் — 53 Sec.)***

>>>>>><<<<<<

சர்வதேச கடல் எல்லையை தாண்டி மீன்பிடித்த காரைக்காலை சேர்ந்த 25 மீனவர்களை இலங்கை கடற்படையினர் பிடித்து சென்றனர்.

இந்த மீனவர்களின் இரண்டு மீன்பிடி படகுகளையும், இலங்கை கடற்படையினர் சிறை பிடித்துள்ளனர்.

இந்த மீனவர்களை காங்கேசன் துறையில் உள்ள இலங்கை கடற்படையினரின் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

>>>>>><<<<<<

மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ, அருணாச்சலப் பிரதேசத்தின் Tawang மாவட்டத்தில் உள் விளையாட்டு அரங்கத்தை திறந்துவைத்தார்.

மத்திய அரசின் கேலோ இந்தியா திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட இந்த விளையாட்டு அரங்கத்தில், பல்வேறு விளையாட்டுப் போட்டிகளுக்கான வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இளையோரை விளையாட்டுத்துறையில் ஊக்குவிக்க இந்த விளையாட்டு அரங்கம் உதவிகரமாக இருக்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

சீனாவின் **Jiangsu** மாகாணத்தில் பட்டாசு கடையில் நேரிட்ட தீ விபத்தில் எட்டு பேர் உயிரிழந்தனர்.

சீன அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், காயமடைந்தவர்களை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

சீன புத்தாண்டு கொண்டாட்டத்தையொட்டி பட்டாசுகள் விற்பனை நடைபெற்றுவரும் நிலையில், இந்த விபத்து நேரிட்டது.

>>>>>><<<<<<

ஊழல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட யுக்ரைனின் முன்னாள் எரிசக்தித்துறை அமைச்சர் **German Galushchenko**-வை, அந்நாட்டு ஊழல் தடுப்பு காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

எரிசக்தித்துறை ஊழல் குற்றச்சாட்டுகளையடுத்து, கடந்த ஆண்டு திரு **Galushchenko** அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமா செய்திருந்தார்.

யுக்ரைனில் இருந்து தப்பி செல்ல முயன்றபோது எல்லைப்பகுதியில் ஊழல் தடுப்பு காவல்துறையினர் அவரை கைது செய்தனர்.

>>>>>><<<<<<

**ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் ஈஸ்ட் பெங்கால் அணி இன்று ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.**

**கொல்கத்தாவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.**

**>>>>>>END<<<<<<**